உ

வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

Vol. 5 February 1943 No. 2

விஷய சூசிகை.

	பக்கம்
பலவகை (பண்டிட் நாராயணய்யங்கார்)	69–72
மதுரை சுதேச வைத்திய சபையின் வருஷாந்த அறிக்கை	1–2
விஷமஜ்வரம் (மதுக்கூர் Dr. K. ஷாரோடி அவர்கள்)	3–5
ஹிருதயம் (ஈரோடு Dr. V. அச்சுதன் நாயர் அவர்கள்)	5–8
	9–14
ஹிருதயம் (பத்திராதிபர்)	1–14
வைத்தியச்செய்திகள்	

சந்தா விகிதம்.

வருஷ சந்தா:—
உள் நாட்டுக்கு ரூ. 2
வெளிநாட்டுக்கு ரூ. 3

விளம்பர விகிதம்.

மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8
" " ½-க்கு ரூ 4
" " ¼-க்கு ரூ 2

கிடைக்குமிடம்:—

Pandit, S. NARAYANA IYENGAR.

Editor and Publisher.

No. 2, Police Station West Lane, Madura.

[விலை **0—3—0**

காபிரைட்]

ங்கடேஸ்வர் பிரஸ், மதுரை—42.

ஸ்வைத்திய சந்திரிகா:—சுதேச வைத்திய முறைகளைத்தெரிந்து கொள்ள விரும்புகிறவர்களுக்கு இந்த மாதாந்த பத்திரிகை ஓர் இன்றியமையாத சாதனமாகும். ஸஹஸ்ரயோகம், ஔஷதசாரம் காயகல்பம் அல்லது ரஸாயன முறை, சித்தர் முறை, க்ஷயரோகமும் அதன் சிகித்சையும், ஆக இந்த ஐந்து புஸ்தகங்களும் இதில் பூர்ணமாக வெளிவந்துள்ளன, சென்ற நான்கு வருஷ சஞ்சிகைகளும் தயாராக இருக்கின்றன. ஒவ்வொரு வருஷ சஞ்சிகைகளும் வருஷ சந்தா இரண்டு ரூ. க்குக் கொடுக்கப்படும். தபால் சார்ஜ் வேறு.

ஔஷதசாரம்:—இது வைத்திய சந்திரிகையில் வெளிவந்துள்ளது. இது தனியாக பைண்டு செய்யப்பட்டுள்ளது. இதில் 234 மருந்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. வடதேசங்களில் பெரும்பான்மையாகக் கையாளப்படும் பல உயர்ந்த முறைகள் இதில் அடங்கியுள்ளன. விலை ரூ 0—12—0 தபால் செலவு வேறு.

ஸஹஸ்ரயோகம்:—மலையாள தேசத்தில் பிரசித்தமான நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு, விரிவான குறிப்புகளுடன் கூடியது. கண், காது, மூக்கு, காது, தொண்டை, சிரஸ், முதலிய உறுப்புகளில் உண்டாகும் நோய்களும் அவைகளுக்கு மருந்தும் சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. நடை முறையில் வழங்கிவரும் கஷாயங்கள், தைலங்கள், சூர்ணங்கள், லேகியங்கள், குளிகைகள், முதலியன மிக நேர்த்தியான முறையில் வர்ணிக்கப்பட்டுள்ளன. இதில் மருந்துகள் மொத்தம் 867 காணப்படுகின்றன.

விலை ரூ 1 தபால் செலவு வேறு.

க்ஷயரோகமும் அதன் சிகித்சையும்:—இதில் ஆங்கில முறைப்படியும் ஆயுர்வேதக்கொள்கையையும் அநுசரித்து விரிவான சிகித்சையும் மருந்து முறைகளும் வர்ணிக்கப்பட்டுள்ளன.

விலை ரூ 0—8—0 தபால் செலவு வேறு.

கிடைக்குமிடம்:—**பண்டிட் நாராயண அய்யங்கார்,**
நெ. 2, போலீஸ் ஸ்டேஷன் மேற்கு சந்து, மதுரை.

வைத்தியச்செய்திகள்.

திருச்சி ஆயுர்வேத சபா:—ஷ்டி சபையின் மாதாந்தக்கூட்டம் 29—12—42உ செவ்வாய்கிழமை மாலை 5-30-மணிக்கு திருச்சி ஆண்டார் வீதியிலிருக்கும் ஹிந்து எலிமெண்டரி ஸ்கூலில் நடைபெற்றது. ஸ்ரீமான் P. G. கணபதி சாஸ்திரிகள் தலைமை வஹித்தார்கள். ஸ்ரீமான் K. சூலபாணி வாரியரவர்களால் **வாதரக்தம்** என்பதுபற்றி ஸம்ஸ்க்ருதத்தில் ஓர் வியாஸம் எழுதி படிக்கப்பட்டது சர்சைக்குப்பிறகு மாலை 7-30-மணிக்கு வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிவுபெற்றது. V. R. Subrahmanya Iyer,

காரியதரிசி.

(178) தாளக்கட்டு.—சுத்தி செய்த தாளக்கட்டிக்கு நீர்மேல் நெருப்பு என்ற செடியை அரைத்துக் கவசம் செய்து காய வைத்துச்சீலைமண் செய்து கதுவாலி புடத்திற்கு மேல் படாமல் காடை புடத்திற்குக்குறையாமல் புடம் போட்டு ஆறவிட்டு எடுக்கக் கட்டும். பின்பு மேல் சொல்லியபடி செய்து மணல் புடமிடக்கட்டிக் கொள்ளும். சன்னி சைத்தியங்களுக்கு உரைத்துத் தகுந்த அனுபானங்களில் கொடுக்க விலகும்.

(179) வங்க பஸ்மம்—வங்கத்தைச் சுத்தி செய்து பிறகு பாச்சா வேர் பட்டையை அமரிவிட்டரைத்துக் கவசம் செய்து சுண்ணும்புசீலை ஏழு செய்து அதற்குமேல் வெற்றிலை போற்றி அதன் மேல் ஏழுசீலை மண்செய்து வெப்பாலைக் கட்டை 12 அங்குல நீளம் கண்டக்கால் பருமனுள்ளதாக எடுத்து நடுவில் குடைந்து அதில் வைத்து தாள் போட்டு சந்து வாய்க்கு மண்பூசி கஜபுடமிடவும். ஆறவிட்டு எடுக்கப் பஸ்மமாகும். ஷை பஸ்மத்தில் பணவிடையை, வெண்ணையில் மூன்றுநாள் ஆறுவேளை கொள்ளமேகம், வாயு, தந்தி மேகம், தாது நஷ்டம் முதல் நீரும். உப்பில்லாப் பத்தியம். பிறகு இருபது நாள் கொள்ள வீரிய விருத்தி உண்டாகும். இச்சாபத்தியம்.

(180) திரிவங்க பஸ்மம்—நாகம் பலம் இரண்டு, கருவங்கம் பலம் ஒன்று, வெள்வங்கம் பலம் அரை இவைகளை ஓர் சட்டியிலிட்டு உலையில் வைத்து ஊதி உருகிக் கண்விட்டு ஆடும் போது கோவையிலைச் சார் ஒரு பொட்டுவிட்டுக் கிளர உள்ளே எரிந்து பஸ்மமாகும். வஸ்திர காயம் செய்து எடுத்துக்கொண்டு பணவிடை பஸ்மத்தை வெண்ணையில் கொள்ள முன் சொன்ன நோய்கள் தீரும். மூலரோகம் நீங்கும்.

(181) வங்க பஸ்மம்—சுத்தி செய்த வெள்வங்கக் கட்டிக்குச் சிறு புள்ளடி (இதையே செருப்படி என்பர்) அரைத்துக் கவசம் கட்டிச் சீலைமண் வலுவாகச் செய்து புளியங்கட்டையைக் குடைந்து அதற்குள் வைத்து சந்து வாய்க்கு மண்பூசி கஜபுடமிட பஸ்மமாகும். தகுந்த அனுபானங்களில் பணவிடை இட மேக நோய்கள் தீரும்.

(182) நாகபஸ்மம்—சுத்தி செய்த பிறகன் நாகத்தை இரண்டு பலம் எடுத்து ஓர் சட்டியில் போட்டு உலையில் வைத்து ஊதி கண்விட்டு ஆடும் போது புளியாரை ரஸம் ஓர் சொட்டு விட்டுக் கிளர எரிந்து பஸ்மமாகும். ஷை பஸ்மத்தை வஸ்திர காயம் செய்து கொண்டு வெண்ணெயில் பணவிடை கொள்ள நவமூலம் தீரும். உஷ்ணவாயு நீங்கும்.

(183) ரஸபஸ்மம்—தேவையான ரஸத்தை எடுத்து லகுவான சுத்தி செய்து பிறகு சோற்று உப்பு, சீனிக்காரம், (இதுவே படிகாரமாகும்) நாமக்கட்டி (அதாவது வைஷ்ணவர் நெற்றியில் திலகமிடும் மண்) இவைகளைச் சமமாக எடுத்து நொறுக்கி ஓர் சட்டியில் பாதி சட்டியளவு போட்டு அதன் நடுவில் ரஸத்தை விட்டு சட்டி கழுத்தளவு முன் பொடியைப் போட்டு வாய்ச்சுச் சட்டி பொருந்தும்படி மூடி சந்துவாய்க்குப் பலமாகச் சீலைமண் செய்து காயவைத்து அடுப்பேற்றி 12 மணி எரித்து ஆறவிட்டு எடுத்துப் பார்க்க மேல் சட்டியில் ரஸம் பதங்கித்திருக்கும். அந்தப் பதங்கத்தை ஓர் கல் சிசாவில் பாதி சிசா போட்டு சிசா வாய்க்கு மாக்கல் மூடி போட்டு வாய்க்கு உருந்துமானால் சீலை மண் செய்து காயவைத்து ஓர் சட்டியில் ஒரு விரல் கனம் மணல் கொட்டி அதில் அந்த சிசாவை வைத்துச் சட்டியின் கழுத்தளவு மணல் கொட்டி மேல் சட்டி மூடி சந்துவாய்க்குச் சீலைமண் செய்து காயவைத்து 12 மணி எரித்து ஆறவிட்டு எடுத்து மறுபடியும் முன் போல கல் சிசாவில் வைத்து முன் போல சீலைமண் செய்து முன் போல் எரித்து ஆறவிட்டு எடுத்துத் தகுந்த அனுபானத்தில் பணவிடையை மூன்றுநாள் ஆறு வேளை கொள்ள மேகசூலை, ஊரல், கைகருப்பு, கால்கருப்பு, கருங்குஷ்டம், செங்குஷ்டம் முதலியன தீரும். வாய்பிடிக்காது. உப்பில்லாப் பத்தியம்.

184. வீரமெழுகு:—வீரம் பலம் ஒன்று பொடிசெய்து இரும்புக்காண்டியில் போட்டு முழுகும்படி முருங்கைப்பூ ரஸம்விட்டு அடுப்பேற்றி [illegible] எரித்துக் கிளர மெழுகாகும். ஒரு பொட்டு[illegible] வெண்ணெயும் [illegible] போட்டு தேனும் விட்டு எடுத்துப்

பத்திரப்படுத்தி குன்றியளவு கொடுக்க சன்னி சைத்தியம் முதலி யன் விலகும், குறிப்பு:—125 முதல் 183 முடிய உள்ள முறைகள் சந்திரிகையின் ஆசிரியர் தகப்பனர் அனுபவித்த முறைகள்.'

185. ப்ரேமவடீ:—திரிபலை, திரிகடு, கல்மதம், வகைக்குத் தோலா 5, வெள்வங்கபஸ்பம், அக்ராகாரம் வகைக்கு $\frac{3}{8}$ தோலா, குங்குமப்பூ $\frac{3}{16}$ தோலா, கஸ்தூரி குன்றியிடை 6, இவைகளைக்கல் வத்திலிட்டு அரைத்து கருவாப்பட்டைத் தைலம் இருபது சொட்டு விட்டு அரைத்துப்பிறகு சந்தனத்தைலம் இருப்து சொட்டுவிட்டு அரைத்துப்பிறகு சாம்பிராணித்தைலம் இருபது சொட்டுவிட்டு அரைத்துப்பிறகு வல்லாரை ரஸத்தால் 12 மணி அரைத்துச்சிறிய நெல்லிக்காயளவு மாத்திரை செய்து நிழலில்காயவைத்துவேளைக்கு ஒரு மாத்திரைவிதம் காலையிலும் சாயங்காலத்திலும் உட்கொண்டு கால்சேர் பசும்பாலில் ஒரு தோலா ஜீனி சேர்த்து அனுபானமாகச் சாப்பிட சகல நோய்களும் போம். தாதுபுஷ்டி யுண்டாகும்,

186. அப்பிரகச்சிந்தூரம்:—அப்பிரக நவநீதம்பலம் பத்து எடுத்து அதோடு கந்தகம் பலம் ஒன்று சேர்த்து கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாற்றால் நான்கு யாமம் அரைத்து பில்லைதட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டு ஓடுமூடி சீலைமண் செய்து முப்பது எரு வில் புடமிடவும். இவ்விதம் புடம் தோறும் கந்தகம் சேர்த்து எலுமிச்சம்பழ ரஸம், கரிப்பான், செருப்படை, பெருதலை, முருங் கப்பூ, பொற்றலைக்கரிப்பான், சிறுசெருப்படை, இவைகளின் ரஸத் தில் வகைக்குப்பத்து புடம்போட அருணன்போல் சிந்தூரமாகும். இருமல், க்ஷயம், ஈளை, முதலிய கபநோய்கள் முழுவதும் விலகும்.

187. ஜயநீர்:—கந்தகம் பலம் மூன்று, நவச்சாரம் பலம் ஏழு, அன்னபேதி பலம் இரண்டு, வெடியுப்பு பலம் பத்து, வெண்துருசு, சீனிககாரம், அட்டுப்பு, வகைக்குப்பலம் ஐந்து, இவைகளைப்பொடி செய்து பழைய புளி பலம் 37 சேர்த்து இடித்து எல்லாவற்றையும் ஓர் சட்டியில் போட்டு அடுப்பேற்றி எரிக்க சரக்குகள் பற்றிஎரிந்து சுண்ணமாகும். அதை ஓர் பீங்கானில் வைத்து மூடி மண்ணில் புதைத்து மண்டலம் சென்றெடுக்கப் பீங்கானில் ஜயநீர் இறங்கி

இருக்கும். அதைச் சீசாவில் பத்திரப்படுத்தவும். அயம், அப்பிரகம், முதலியவைகளை இந்த ஜயநீரால் அரைத்து பில்லைதட்டிக் காயவைத்துப் புடமிடபஸ்மமாகும். கோழிப்புடமாகப்பத்து புடமிடவும்.

186. பஞ்சபாஷாண சிந்தூரம்:—வெள்ளைப்பாஷாணம், தாளகம், மனோசிலை, சாதிலிங்கம், காந்தம், கந்தகம், ரஸகர்ப்பூரம் (இதையே சாதாரணமாகப் பூரம் என்பர்) இவைகளைத் தனித்தனியே சுத்திசெய்து வகைக்குப்பலம் ஒன்று எடுத்துக் கல்வத்திலிட்டு குப்பைமேனி, வெற்றிலை, பருத்தி, வெள்ளறுகு, துளசி, வேலிப்பருத்தி, பொடுதலை, இவைகளின் ரசத்தால் வகைக்கு நான்கு யாமம் அரைத்து ஒரே பில்லையாக அல்லது இரண்டு மூன்று பில்லைகளாகச்செய்து நிழலில் உலர்த்தி அதைப் பச்சை வெற்றிலையால் எழு தடவை சுற்றி அப்படியே ஓர் சட்டியில் வைத்து சட்டியின் வாயில் பொருத்தமாக மேல்சட்டி கவிழ்த்து மூடி சட்டிகளின் வாய்க்குச்சீலைமண் செய்து காயவைத்து அடுப்பேற்றி தீபம்போல 12 மணி எரித்து ஆறவிட்டு மேல்சட்டியில் பதங்கித்திருக்கும் சிந்தூரத்தை எடுத்து பத்திரப்படுத்தி பணவிடைதேன் முதலிய அநுபானங்களில் கொடுக்க ஜன்னி, சைத்தியம், காய்ச்சல், முதலியன் தீரும்.

189. நத்தச்சூரி லேகியம்:—நத்தச்சூரி சமூலம் பலம் நான்கு ரோசாமொட்டு, முருங்கைப்பூ, வகைக்குப் பலம் அரை, முருங்கை விதை, நீர்முள்ளி விதை. ஆலம் விதை, கல்லத்திவிதை, வாதாம் பருப்பு, முந்திரிப்பருப்பு, வகைக்குப்பலம் கால், ஆலம்விழுதுத் தூள் பலம் ஒன்று, பேரீச்சம்பழம் பலம் இரண்டு, சுக்கு, ஜீரகம், கசகசா, வகைக்கு விராகனிடை மூன்று, அதிமதுரம், மிளகு, வகைக்கு விராகனிடை இரண்டு, கொத்தமல்லிவிதை விராகனிடை பத்து, நெல்லிவற்றல் விராகனிடை ஐந்து, அரத்தை. திப்பிலி, வகைக்கு விராகனிடை ஒன்று, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, கிராம்பு, வகைக்கு விராகனிடை இரண்டு, இவைகளில் பேரீச்சம்பழம் நீங்கலாக மற்றவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து பேரீச்சம் பழத்தையும் விதை நீக்கி அரைத்து அதில் சேர்த்துப். பிறகு ஒரு

ஸ்ரீ தன்வந்தரயே நம:

மதுரை ஸ்வதேச வைத்யசபையின் (16-3-42) முதல் (23—1—43) முடிய உள்ள நான்காவது வருஷாந்திர அறிக்கை

இந்தவைத்ய ஸபையின் 3-வது ஆண்டுவிழா 1942ஸு மார்ச்சுமீ 29உ ஞாயிற்றுக்கிழமை மாலை 3-30-மணிக்கு (இதே) சூரியநாராயண் எலிமெண்டரி பாடசாலையில் நடைபெற்றது. அன்று நாள் ஸ்ரீ S. சாம்பமூர்த்தி அய்யர் B. A., B. L., (திருமங்கலம்) தலைமைவகித்து விழாவை சிறப்பித்தார். பல ஊர்களிலிருந்து பல வைத்யர்கள் வந்து பலவித உபன்யாசங்கள் செய்தார்கள். உபன்யாசங்கள் வெகு தெளிவாகயிருந்தன. சந்தனம் தாம்பூலம் பார்டியுடன் இனிது முடிவுபெற்றது.

1942ஸுத்திற்கு சங்க நிர்வாக அங்கத்தினர்கள் 1 தலைவர் C. M. ராமசாமிசர்மா, காரியதரிசி & பொக்கிஷதார், பண்டிட் S. நாராயண அய்யங்கார் அங்கத்தினர், S. வன்னியகோனார்.

பொதுக்கூட்டங்கள் ஆண்டுவிழாவின்போது நடந்த 3 சொற்பொழிவுகள் நீங்கலாக 4 பொதுக்கூட்டங்களில் 4 சொற்பொழிவுகள் நிகழ்ந்தன பொதுக்கூட்டங்கள் 11—4—42 தலைவர் டாக்டர் V. சுவாமிநாதய்யர் உபன்யாசகர் டாக்டர் C. M. ராமசாமி சர்மா விஷயம் க்ஷயரோகமும் அதன் சிகித்சையும். 23-6-42 தலைவர் ஸ்ரீ N. R. கிருஷ்ணசாமி அய்யங்கார் B.A., B.L. வைத்ய ரிஜிஸ்டிரேஷன் விஷயமாக சென்னை அரசாங்கத்தார் 8—6—42ல் விடுத்துள்ள 'அறிக்கையைப்பற்றித் தீர்மானங்கள் செய்து சர்க்காருக்கு அனுப்புதல.' 25—11—42 தலைவர் ராமேஸ்வரம் தேவஸ்தானம் பிரின்சிபால் R. V. சுப்ரமணிய அய்யர் அவர்கள் உபன்யாசகர் V. குமாரமேனன் விஷயம் வாதரோகமும் ஸ்வேத சிகித்சை. 7—11—42 தலைவர் ஸ்ரீ N. S. விஸ்வநாதய்யர் B.A., B.L. உபன்யாசகர் ஸ்ரீ டாக்டர் T. S. சுப்ரமண்யம் தன்வந்தரியின் பெருமை. நிர்வாகஸபை கூட்டங்கள் 1. மகாசபைகூட்டங்கள் 3. கால நிலைமையையனுசரித்து பல கூட்டங்க்ள் நடத்த முடியவில்லை.

நம் சபையின் சார்பாக நடைபெற்ற கூட்டங்களனைவற்றிற்கும் ஷை பள்ளிக்கூடத்தை கொடுத்துதவிய மானேஜர் ஸ்ரீ N. ராம

சாமி அய்யங்கார் அவர்களுக்கும் கூட்டங்களை வெற்றிகரமாய் நடாத்தேறச்செய்த தலைவர்கள் பேச்சாளர்கள் வைத்தியர்கள் அபிமானிகளுக்கும் பொருளுதவிசெய்த கனவான்களுக்கும் அங்கத்தினர்களுக்கும் எமது நன்றியையும் வந்தனத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம். சபை கணக்குகளை ஆடிட்செய்த T. S. சுப்ரமண்யம் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்தக்கடமைப்பட்டுள்ளோம் எமது ஸபையின்பேரில் அபிமானமும் அன்பும் அனைவரும் வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

S. நாராயணய்யங்கார், காரியதரிசி.

21—1—43-ல் நடந்த தீர்மானத்தின்படி நிர்வாக சபையாரால் 1942ஞு மார்ச்சுமீ 16உ முதல் 1943ஞு ஜனவரிமீ 23உ வரை உள்ள சபையின் வரவு செலவு கணக்குகளை ஆடிட்செய்து தரும்படி கொண்டபடி ஆடிட்செய்து அடியிற்கண்ட ரிப்போர்ட்டை ஸமர்ப்பித்திருக்கிறேன்.

15—3—42 கையிருப்பு	ரூ	12—5—3
1942 வருஷ சந்தா வரவு		12—8—0
மொத்தம் 23—1—43 வரை கையிருப்பு	ரூ.	24—13—3

செலவுகள் ஒன்றுமில்லை.

ஸபையின் சாமான்கள்:—300 பவர் புது பிரைம்ஸ் பெட்ரோமாக்ஸ் லைட் 1 ஸ்பிரிட்கேன் 1 ஸ்டீல் டிரங் 1 கத்திரிக்கோல் 1 பன்சிங்மெஷின் 1 பேப்பர் வெயிட் 1 சபா கண்ணாடி போர்டு 1 துணி போர்டு 1 மேஜை விரிப்பு 1 ரப்பர்ஸ்டாம்பு 1 மைபாட் 1 போட்டோ 1 உருப்படி 12. ஸ்டேஷனரி சாமான்கள்:— 2 குயர் பேப்பர் 8lbs 10lbs ¾ குயர் (18 papers) colour பென்சில் 2 கார்பன் பேப்பர் 6 ஸ்டாம்பு கையிருப்பு 0-2-3 ரிக்கார்டுகள்: (1) மினிட்ஸ்புக் (2) கணக்கு நோட் (3) மெம்பர் நோட் (4) விசிட்டர் புக் (5) பொது ரிஜிஸ்டர் (6) நோட்டீஸ் புக் (7) ஸ்டாம்பு நோட் (8) பொது விவர 2 குயர் (9) ரசீது 5-10 புஸ்தகம் (10) File 2 புதசு 1 பழசு 1.

மேல்கண்ட சாமான்களும் இருக்கின்றன.

23—1—43
மதுரை

T. S. சுப்ரமண்யம்,
ஆடிட்டர்.

விஷமஜ்வரம்.

(மதுக்கூர் Dr. K. ஷாரோடி அவர்கள்)

(2) தக்ஷன் என்பது சந்திரன்:—சந்திரஸஜாதீயங்கள்—நக்ஷத்திரங்கள். அச்வின்யாதி நக்ஷத்திரங்களை ஆதிமக்ரஹமான தனக்கு ஆதீனப்படுத்தத் தவறிவிட்டதால் (அச்வினி, மகம், மூலம்—கேது தசை, பரணி, பூரம், பூராடம், சுக்ரதசை) கோபங்கொண்ட ருத்ரன் என்றும் கோடை சூரியனின் உஷ்ணத்தால் சுரமுண்டாவதென்று மறுபொருள் (ஜோதிட ரூபத்தில்) (3) சைவ வைஷ்ணவர்களான, ததீசி, பிருகுரிஷிகளின் விருத்தங்களான வாதப்ரதிவாதங்களினால் ஏற்பட்ட ஸபையோர்களின் கொடும் கோபம் ஜ்வர ரூபமாக வெளிக்கிளம்பியதென்று ஓர் வியாக்யமான அர்த்தம். (5) சரகவார்த்தைப்படி ஜ்வரதத்வம் பிண்டத்திலும் பிரம்மாண்டத்திலுமுண்டு. உண்டாகும் கார்யங்கள் யாவற்றும் அநித்யங்களும் துக்ககரங்களுமாகும். எக்காரணங்களினால் மானவர்கள் உண்டாகின்றனரோ அக்காரணங்களினாலேயே ஆதி வியாதிகளுமுண்டாகின்றன. சுரத்தை யுண்டுபண்ணிய கடவுள் அக்காரணங்களினாலேயே ,சீந்தி, சுக்கு முதலியவற்றையும் உண்டுபண்ணி யுள்ளார். காரணங்களின் ஸாம்ய வைஷம்யங்களினால் நன்மை தீமைகள் ஏற்படுகின்றன. ருத்ரன் ப்ராணங்களின் நன்மை தீமைகளைக் கொடுக்கின்றார். இவர் ஸத்வப்ரகிருதியா யிருப்பினும் தமோகுணியும் கூட. ருத்ர பரிவாரங்களும் தத்ரூபங்களே. விநாயக பாலக்கிரஹங்கள், அம்மை ஜ்வரம் முதலியவைகளும் சிவ பரிவாரங்கள் என்றும் கூறப்படுகின்றது. மானிட சரீரத்தைப் பொறுத்தமட்டில் நாபி ஹிருதயஸ்தானங்களே ஜ்வரோத்பத்தி மூலங்கள், வாஹடாசாரியரின் அபிப்பிராயப்படி இது பித்தஸ்தானமாகும். நாபிகமலப்பக்கத்திலேயே மணிபூரகம் அல்லது ஸௌரமண்டல சக்ரமிருக்கிறது. இச்சக்கரத்தில் பத்து நாடிகளிருக்கின்றன. (Abdominal Brain) (1) அனுகோஷ்டிகம் (2) பைத்திகம் (3) ப்ளீஹிகம் (4) பர்யாமாசயிகம் (5) மூத்ரபிண்டோபரிஸ்தம் (6) மூத்ரபிண்டகமலம் (7) வீரியவாஹகம் (8) பிருஹஜ்ஜாடரகமலம் (9) க்ளோமம் (10) ஜாடரம் (Phnine, Hepatic, Splenic superior gastric, Suprarenal Renal, Spemeties Superior Mesentrric, Pananthies and cobe) இச்சக்ரத்தில் அக்னிரூபமாக கருதின் குலநாசரூபமான

பல பெரும் சத்திகளோடிருகிறுர் என்ற த்யோதனையினுல் இங்கிருந்து கிளம்பும் நாடி ஜாலங்கள் அன்ன பசனம், ருதிராபிஸரணம், மூத்திர நிர்வஹனம் முதலிய பெரும் வேலைகளைச் செய்கிறபடியால் இந்த ஸ்தானத்தை ஓர் யாககுண்டமாகவும் இதற்குச் செய்யவேண்டிய ஆகுதியைத் தகுதியற்ற முறையில் செய்யுமாயின் ஸ்தானுதி தேவதையான ருத்ரன் (அக்னி) விகாரமடைந்து கோபமாகும் சூட்டை வெளிக்கிளப்புவதே சுரமாகக் கூறப்படுகிறது. மறுபடியும் யோசிக்கும்கால் நாபிகமலத்திற்கு மேல்பாகத்தில் ஹிருதயகமலமிருக்கிறது (cordiac pxhes). இக்கமலத்தின் பீஜம் வாயு, இத்துடன் பன்னிரண்டு நாடிகள் ஸம்பந்தப்பட்டுள்ளன. (முக்யமாக) (1) Right dup cordiac (2) Left dup cordiac (3) anterior pulmonary (4) Posterior pulmonary (5) Superficial cardiac (6) Cardiac ganglion (7) Right coronery (8) Ventriculor (9) Left coronery (10) Endo cardiac (11) Ramak (12) Bidders ganglia என்ற ஆங்கிலப்பெயர்களை யுடையவைகளாகும். இதுகளின் அவசியமும் பெருமையும் அறிவாளிகள் விளங்கிக்கொண்டதாகும். அதன் அதி தேவதை ஈசுவரர், இதன் ஸம்யமனத்தினுலுண்டாகும் மணிபூரக வைஷம்யத்தால் (ஆகார விஹாராதி விபரீதத்தினுல்) ஜீவனுடைய அஞ்ஞானத்தைப் போக்கி வைராக்யத்தை யடையாததினுல் சரீரத்திலுண்டாகும் ஓர் கொதிப்புத் தன்மை சுரமாகுமென்றும் கூறலாம். அல்லது தக்ஷன் என்பது உதரமஸ்திஷ்கம் (Abdominal Brain) இதன் அவ்யவஸ்தையினுல் (மித்யாஹாராதி) ருத்ரப்ராணனின் (திரிதோஷத்தின் அக்னி, ஸோமம், வாயு, ப்ராணா:) கோபம் ஜுரமாகும் என்றும் கூறலாம். இவ் வைஷம்யத்தாலுண்டாகும் எண்வித ஜுர வேற்றுமைகள் ருத்ரனின் அஷ்டமூர்த்திரூபங்களாம். இன்னும் யோசிப்பின் உலகத்தினர் மனங்களினுல் (தக்ஷ) தன்னை (தங்களை) நினைக்காததால் உண்டான அபமானத்தினுல் கோடமடைந்த ருத்ர ருத்ராணிகளின் தாபமே உலகத்தில் தற்போது கோரரூபமாய் நடந்துவருவதென்றும் சொல்லலாம். மேலே கூறப்பட்ட பொருள்களினின்றும் தோஷ கோபங்களினுல் ஜுரமேற்படுகிறதாயினும் இதற்கு தைவவ்ய பாச்ரயம் கூடவிருப்பதாய் அவச்யம் அங்கீகரிப்பது நியாயமாகுமென

கூசாது கூறலாகின்றது, அதனால் இப்பிணியில் தைவவழிபாடுகளும் கைக்கொள்ளப்படவேண்டியதாய் விளக்கமாகின்றது. ஔஷதோப சாரத்தில் நூற்றுக்கணக்கிலோ ஆயிரக்கணக்கிலோ கஷாய, ஆஸவ, சூர்ண, தைல, கல்க, ஸ்வரஸ, பஸ்மசிந்தூராதிகள் ஸந்தர்பானுஸா ரம் பிரயோகிக்கப்படக் கூறப்பட்டுள்ளது. விஸ்தார பயத்தினால் இங்கு விவரிக்கத்தயங்குகிறேன், மேலும் பத்திராதிபர் அவர்களின் ஔடதசாரம் என்றும் தலைப்பில் பலவற்றின் விவரங்களை விளக்கி. வருவதால் அவைகளில் பல ஜூாஹாரங்களான வைகளே. மற்றும் பலவற்றை பின்னுடியும் வெளிப்படுத்தக்கூடுமாதலால் (பாரதிகா ரேஷ்விவ) என்றபடி நாம் சிரமப்படத் தேவையில்லை.

ஹிருதயம்.

(ஈரோடு Dr. V. அச்சுதன் நாயர் அவர்கள் L. I. M:)

யக்ருத் க்லோம புப்புஸ ப்லீஹாதி கோஷ்டாங்கங்களின் ஸ்தான விவரமானது சாஸ்திரங்களில் முக்கியமாக ஹிருதய ஸ்தான நிரூபிதமாகவே காணப்படுவதால் ஹிருதயத்தின் ஸ்தானத்தைப் பற்றியும் அதன் அர்த்தத்தைப்பற்றியும் சரியாகவும் தெளிவாகவும் தெரிந்துகொள்ளவேண்டியது மிகவும் அவசியம். நமது பக்ஷத்தில் ஹிருதயமானது சுவாஸாசயங்களும் 'ஹார்ட்' என்ற உறுப்பும் சேர்ந்ததாகுமென்றும் அது உரஸ்ஸின் நடுவில் அமைந்திருப்ப தென்றும் ஏற்கனவே நிரூபித்துள்ளோம். தற்காலம் பத்திராதிப ரவர்கள், 'ஹார்ட்' என்பதைத்தான் ஹிருதயமாகக் கொள்ளவேண் டுமென்ற தமதபிப்பிராயத்தை வற்புறுத்தும் பொருட்டு க்லோம புப்புஸங்களை இரு சுவாஸாசயங்களாகக் கொண்டு அதை சாஸ்திர மூலமாக நிலைநாட்ட முயன்றிருப்பதை காண்கிறோம். க்லோம புப்புஸங்கள் சுவாஸாசயங்களல்லவென்றும் ஹிருதயத்திற்கு நாம் கொண்டுள்ள அர்த்தத்திற்கு அவைகளின் ஸ்தான லக்ஷணம் பாத கமாகாதென்றும் ரூபிக்க பத்திராதிபரவர்களால் சொல்லப்பட்டுள் ள பிரமாண வசனங்களே போதுமானவை யாதலால் வேறு பிரமா ணங்கள் தேடி இந்த வ்யாசத்தை வளர்த்தவேண்டியதில்லை. "ஸப்த

சாதாரா: ரக்தஸ்யாத்ய: க்ரமாத் பரே"......இத்யாதி வசனத்திற்கு ரக்தாசயத்தில் ஹ்ருதயம் கபாசயத்தில் க்லோமாவும் புப்புஸமும், ஆமாசயத்தில் யக்ருத்தும் ப்லீஹாவும்......இம்மாதிரியாக பத்தி ராதிபரவர்கள் அர்த்தம் செய்கின்றார். அஷ்டாங்க ஹிருதயத்தின் பிரசித்த வ்யாக்யானங்களில் ஒன்றிலும் இந்த மாதிரி அர்த்தம் செய் ததாகக் காணவில்லை யாதலால் இது பத்திராதிபரவர்களுடைய சொந்தமென்றே நம்புகிறோம். பிராமாணிகாபிப்பிராயம் தெரிந்து கொள்ள வழியில்லாத விடங்களில் பண்டிதர்கள் தங்களுக்குத்தெ ரிந்தவாறு மூல சுலோகங்களுக்கு அர்த்த கல்பனம் செய்யும் வழக் கத்தை நாம் ஆக்ஷேபிப்பதில்லை. ஆனால் அந்த அர்த்த நிர்ணய மானது சாஸ்திர யுக்திகளுக்குப் பொருத்தமாக விருந்தால்தான் ஜனங்கள் அதை ஒப்புக்கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஷை வசனங்களுக்குப் பத்திராதிபரவர்கள் கொண்டுள்ள அர்த்தமா னது அதை ஸ்தாபிப்பதற்காகவே அவர் எடுத்துக்கொண்ட இதர சாஸ்திர வசனங்களுக்கு முற்றிலும் முரண்பட்டதென்று நமதபிப் பிராயம். "ரக்தஸ்யாத்ய: க்ரமாத்பரே" என்ற வசனத்தைக் கொண்டு ரக்தாசயம் முதலிய ஏழு ஆசயங்கள் சுலோகத்தில் சொல் லப்பட்டுள்ள கிரமத்தின்படி ஒன்றன்கீழ் ஒன்றாக அமைந்திருப்ப தாக அர்த்தம் சொல்வது நியாயமாகும். ஆனால் ஹிருதயம் முதலிய கோஷ்டாங்கங்கள் வசனத்தில் காணும் கிரமத்தை அனுசரித்து மேலே சொன்ன ஏழு ஆசயங்களில் வரிசையாக அமைந்துள்ளன வென்று சொல்வதற்கு நியாயமில்லை. மேலும் கோஷ்டாங்கங்களை ஏழு ஆசயங்களுக்காகப்பங்கிடுவதில் பத்திராதிபரவர்கள் கொண்டுள் ள ரீதியானது மேற்சொன்ன வசனத்திற்கு முற்றிலும் சம்மத மென்றும் நினைக்கமுடியாது. அஷ்டாங்க சங்கிரஹம் சாரீரம் 5வது அத்தியாயம்:—"ஸப்தாசயா: க்ரமாதஸ்ருக்க பாமபித்த பக்வ வாயு மூத்ராதாரா:, தேஷு பிரதிபத்தானி கோஷ்டாங்கானி ஹ்ருதய யக்ருத் ப்லீஹா புப்புஸ உண்டுக வ்ருக்காந்த்ராணீனி......" இந்த வசனத்தில் காணும் 'க்ரமாத்' என்ற பதத்தை கோஷ்டாங்கங் களின் ஸ்தான கிரம நியாமகமாகக் கொண்டால் பத்திராதிபரவர் களால் ஆமாசயஸ்தங்களென்று சொல்லப்பட்டுள்ள யக்ருத் ப்லீ ஹைகள் கபாசயஸ்தங்களென்றும் சுவாஸாசயமென்று சொல்லப்

பட்டுள்ள புப்புஸத்தின் ஸ்தானம் அதற்குக் கீழே என்றும் சொல்ல நேரிடும். மேற்படி வசனத்திற்கு இந்து வ்யாக்யானம்:—"ஆதி க்ரஹணாத் அந்யானி நாப்யாதீனி ஸூக்ஷ்மாணி க்ருஹ்யந்தே", ('முதலியவை' என்று சொல்லியிருப்பதால் நாபி முதலான மற்ற ஸூக்ஷ்மங்களான கோஷ்டாங்கங்களையும் க்ரஹிக்கவேண்டுமென்று இதற்குப் பொருள்) இந்த வசனப்படி பத்திராதிபரவர்களால் வலது சுவாஸாசயமாகச் சொல்லப்பட்ட க்லோமாவின் ஸ்தானம் நாபிக்கு கீழே இருப்பதாகச் சொல்ல நேரிடும். ஆகவே மூல சுலோகத்தில் கோஷ்டாங்கங்களைச் சொல்லியுள்ள கிரமத்தை யொட்டிசரீரத்தில் அவைகளுக்கு ஸ்தான கற்பனம் செய்வது அஸங்கதமாகும். இங்கே சரகம் சாரீரம் 7-வது அத்தியாயம் 10-வது கத்யம்:—"பஞ்ச தச கோஷ்டாங்கானி தத்யதா:—நாபிஸ்ச ஹ்ருதயம் ச க்லோமச யக்ருச்ச......"இத்யாதி வசனமும் கவனிக்கத்தக்கது. இனி பத்திராதிபரவர்களால் எடுக்கப்பட்ட இதர பிரமாண வசனங்களை கவனிப்போம். "நாபி ஸ்தனாந்தரம் ஜந்தோ ராமாசய இதி ஸ்ம்ருத:" ஸசதுர்விதஸ்ய ஆஹாரஸ்ய ஆதா:" "உரோ ரக்தாசயஸ் தஸ்மா தத: ச்லேஷ்மாசயஸ்ம்ருத: 1 ஆமாசயஸ்து தத: தல்லிங்கம் ச கோப்ரவீத்" ச்லேஷ்மாசயஸ்யாதுரஸி தஸ்மாதாமாசயஸ்துவத: என்னும் வசனங்களை கவனித்தால் ஆமாசயமென்பது Stomach என்று புலப்படுவதாக பத்திராதி பரவர்கள் சொல்லுகிறார். ஆங்கிலேயருடைய சாரீரசாஸ்திரத்தில் சொல்லியுள்ள முறைகளைத்தழுவி ஒவ்வொரு உறுப்பையும் ஆயுர்வேதத்தில் கூறப்பட்டுள்ள அங்கங்களுடன் ஒப்பிடுவதில் வ்யாமோஹம் கொண்டு நம்மவர்கள் சாஸ்திர வசனங்களையும் யுக்திகளையும் பறிகொடுக்க முன் வருவது வருந்தத்தக்கது. ஹ்ருதய பதார்த்தத்தை 'ஹார்ட்' என்ற உறுப்பிற்குள்ளும் உரஸ்சப் தார்த்தத்தை சுவாஸாசயங்களுக்குள்ளும் அடக்கிக் கொண்டதைப்போல நாபிக்கு மேல்ஸ்தனங்களுக்குக் கீழேயுள்ளவிசால்கஹ்வரமாகிய ஆமாசயத்தை அதனுள் அமைந்திருக்கும் Stomach என்ற ஓர் சிறுபைக்குள் இவர் அடைத்துக்கொண்டு விடுகிறார் சாப்பிட்ட ஆஹாரத்திற்கு ஆதாரம் என்ற வசனம் பொருந்த வேண்டுமானால் 'நாபிஸ்தனாந்தரம்' என்ற வசனத்தை அவகணிக்கவும் யக்ருத் 'ப்லீஹைகள்' ஆமாசயஸ்தங்களென்ற தமது வ்யாக்யா

னத்தை மறந்து விடவும் செய்ய வேண்டிய அவசியமில்லை. யகிருத்தும் ப்லீஹாவும் ஆமாசயத்தில் அமைந்திருப்பதாகச்சொன்ன பிறகு ஆமாசயத்திற்கு Stomach என்று அர்த்தம் சொன்னால் Liver (யக்ருத்) Spleen (ப்லீஹா) என்ற இரண்டு உறுப்புகள் Stomach என்பதற்குள் இருப்பதாக நினைக்கநேரிடும். சாப்பிட்ட ஆஹாரத்திற்கு ஆதாரமும் ஆமாசயஸ்தமுமான இரைப்பை (Stomac)யை புப்புஸமென்று சொல்வதில் ஒரு விதமான சாஸ்திர விரோதமில்லை என்பது போகப்போக தெளியும். ஆமாசயத்தின் ஸ்தானத்தைக்காட்டுவதற்காக பத்திராதிபரவர்கள் எடுத்துக்கொண்ட முன் சொன்ன வசனங்கள் ஹிருதயத்தைப்பற்றியும் உரஸ்ஸைப்பற்றியும் அவர்கள் கொண்டுள்ள மதத்திற்கு அத்யந்த விருத்தங்கள் என்பதில் சந்தேகமில்லை. ''உரோ ரக்தாசய:'' என்ற வசனம் உரஸ்ஸை ரக்தாசயமாக சொல்லுகின்றது. (பத்திராதிபரவர்களுடைய மதம்: உரஸ்- சுவாஸாசயங்கள்(Lungs)- கபாசயம்.: -ரக்தாசய:- ஹிருதயம்(Heart) இங்கே பத்திராதிபமதமும் பிரமாணவசனமும் பரஸ்பர விருத்தங்களென்று ஸுவ்யக்தம். சுவாஸாசயங்களும் ஹார்டும் ரக்தாசயமும் கபாசயமும் எல்லாம் ஒன்று என்று நினைத்துத்தான் இவர் ''உரோ ரக்தாசய'' என்னும் பிரமாணத்தை அங்கீகரித்தாரென்று நம்மால் நம்பமுடியாது. ''ச்லேஷ்மாசயஸ்ஸ்யாதுரஸி'' என்ற வசனம் உரஸ்ஸில் ச்லேஷ்மாசயமிருப்பதாக சொல்லுகின்றது. ச்லேஷ்மாசயமானது உரஸ்ஸில் இருப்பதாகச் சொன்னால் உரஸ்ஸு வேறு ச்லேஷ்மாசயம் வேறு என்று நன்கு புலனாகிறது' ஆகவே ச்லேஷ்மாசயத்தை உரஸ்ஸாகக் கொள்வது அஸங்கதம். ஆதாராதேய பாவங்களுக்கு ஸாமாநாதிகரண்யம் எப்படிச்சொல்லலாம்? என்று முன் ஒரு தரம் பத்திராதிபரவர்களைக் கேட்டிருப்பதை இங்கே ஞாபகப்படுத்துகிறோம். ''உரோரக்தாசய:'' ''ச்லேஷ்மாசயஸ்ஸ்யாதுரஸி'' என்ற இரண்டு வசனங்களால் உரஸ்ஸானது ரக்தாசயத்திற்கும் ஸ்தானம் என்று புலனாகிறது. ஆகவே உரஸ் என்பதற்குசுவாஸாசயங்களென்றும் ரக்தாசயத்திற்கு 'ஹார்ட்' என்றும் அர்த்தம் கூறுவது சாஸ்திர விருத்தம். இங்கே உரஸ்ஸிற்கும் ஹிருதயத்திற்கும் நாம் கொண்டுள்ள அர்த்தத்தை ஷை பிரமாண வசனங்களைக்கொண்டு பரிசோதிக்க வேண்டுமென்று பத்திராதிபரவர்களைக்கேட்டுக்கொள்கிறோம்.

ஹிருதயம்.

(பத்திராதிபர்)

நம்முடைய ஹிருதயத்தைப் பற்றிய வியாசத்தின் கண்டனமாக டாக்டர் அச்சுதன் நாயர் அவர்கள் எழுதியுள்ள மறுப்பு விஸ்தாரமாக இருப்பது பற்றி அதை நான்கு பாகமாக வகுத்துத் தொடர்ச்சியாக சந்திரிகையில் வெளியிடுவோம். அவற்றுள் முதல் பாகம் கீழே பிரசுரித்துள்ளோம். இனி மற்ற பாகங்கள் மாதம் தோறும் வெளிவரும். டாக்டர் V. N. நாயர் அவர்களுடைய வியாசத்தை நாம் பூர்ணமாக விமர்சம் செய்துமுடிக்கவில்லை. இனி வரும் மாதங்களில் விமர்சம் பூர்ணமாகும். இங்கு ஒரு விஷயத்தை நாம் குறிப்பிடுவது அவசியமாகும். அதாவது நமது மதத்திற்கு அனுகூலமாக நாம் நினைத்துள்ள வசனங்களை மாத்திரம் நாம் வெளியிட்டு நமக்கு விரோதமான வசனங்களை நாம் மறைத்துவிடப் போவதில்லை. அனுகூல வசனங்களைப் போல பிரதிகூல வசனங்களையும் வெளியிட்டு விமர்சத்தைப் பூர்த்தி செய்யப் போகிறோமென்பது கடைசி வரை பொறுத்தவர்களுக்குப் புலப்படும். ஏதோ துராக்ரஹம் கொண்டு ஹிருதயத்திற்கு ஸ்வாரஸ்யமாகக் கிடைக்கும் அர்த்தத்தை நாம் ஒரு போதும் அபலாபம் செய்யப் போவதில்லை. நமக்கு விருத்தமான வசனங்களையும் நாம் உதாஹரிக்கப் பின் வாங்கப் போவதில்லை. இவ்விஷயத்தை ஏற்கனவே "க்லோம" பதத்திற்கு மாதவ நிதானத்தில் வர்ணப்படும் அர்த்த பேதத்தைக் காட்டியுள்ளோம். இனி முடிவிலும் விஸ்தாரமாகக் காட்டப் போகிறோம். நமக்கு பிரதிகூலமான சில வசனங்களை நாம் அறியாமலில்லை. அவற்றை கஷ்டப்பட்டு நமது மதத்திற்கு அனுகுணமாக யோஜனமும் செய்யப் போவதில்லை. ஏனெனில் மூலவசனங்களுக்கு நாம் கொண்டுள்ள மாதிரி ப்ராமாண்யத்தை வியாக்யான வசனங்களுக்குக் கொள்ள முடியவில்லை. ப்ரமாதி தோஷங்கள் வியாக்யானங்களில் காணப்படுகின்றன. ஆகவே பெரும்பாலும் மூலவசனங்களைக் கொண்டு அர்த்தம் நிர்ணயித்து அதற்கு அனுகூலமான வியாக்யான வசனங்களையும் பிரதிகூலமான வசனங்களையும் காட்டிவிடுவதே நமது உத்தேசம். கீழே பிரசுரித்துள்ள மறுப்பில் சில அம்சங்

களுக்குப் பதில் கூறுவது அவசியமாகின்றது. அஷ்டாங் ஹிருதய சாரீர வசனமான "ரக்தஸ்யாத்ய:" என்ற சுலோகங்களில் க்ரம நியமம் காணுகின்றது. "க்ரமாத்" என்று ஆசயங்களில் அன்வயித்து அர்த்தம் செய்வது போலவே "கோஷ்டாங்கானி ஸ்திதான்யேஷு" என்ற இடத்திலும் "எஷு" இந்த எழு ஆசயங்களில், கோஷ்டாங்கானி—இனி சொல்லப் போகும் 12 அவயங்கள், ஸ்திதானி—க்ரமமாக இருக்கின்றன. என்று அர்த்தம் சொன்னோம். இந்த அர்த்தம் எந்த வசனத்துடன் அல்லது யுக்தியுடன் விரோதிக்கிறது என்று நமது கண்டனக்காரர் சொல்லவில்லை. அவர் சொல்லுவது என்னவென்றால் ஸங்கிரஹ வசனத்தில் வேறுபாடு இருக்கிறதென்பதே. இதை நாம் "அங்கிக்ருத்ய" ந்யாயத்தால் பேசுகிறோம். ஹிருதய ஸங்கிரஹ வசனங்களில் வேறுபாடு இருந்தால் ஸங்கிரஹ வசனத்திற்கு அநுகுணமாக ஹிருதய வசனத்தை நயநம் செய்ய வேண்டுமென்ற ராஜாக்ஞை கிடையாது. ஹிருதய வசனத்திற்கு அநுகுணமாகவே ஸங்கிரஹ வசனத்தை என் நயநம் செய்யக்கூடாதென்றால் அதற்கு உத்தரம் என்ன? நாம் சொன்ன அர்த்தத்தை ஒப்பாவிட்டால் ஹிருதய வசனத்தில் வரும் பிரதான தோஷத்தை எற்கனவே சொல்லியுள்ளோம். ஹிருதய சப்தம் ஸமஷ்டி வாசகமாகில் கபாசயத்திற்கும் கோஷ்டாங்கள் எவை? ஹிருதயாதி 12 அவயவங்கள் எழு ஆசயங்களில் இருப்பதாக "கோஷ்டாங்கானி ஸ்திதான்யேஷு" என்ற வசனம் கூறுகிறது. கண்டனக்காரர் மதப்படி "க்லோமபுப்புஸங்கள்" "யக்ருத்ப்லீஹைகள்" ஆமாசயத்தின் கோஷ்டாங்கங்களாக முடிந்தால் அல்லது "க்லோம என்பது பித்தாசயத்தின் கோஷ்டாங்கமாக முடிந்தால் உந்துகம், விருக்கங்கள், நாபி டிம்பம், ஆந்த்ரம், பஸ்தி, இவைகளில் ஒன்று ரக்தாசய ஆமாசய மத்ய வர்த்தியான கபாசயத்தின் கோஷ்டாங்கமாக நமது கண்டனக்காரர் இசையாததால் கபாசயத்திற்குக் கோஷ்டாங்கம் ஒன்றுமே இல்லாமல் போகும் என்ற முக்கிய தோஷத்திற்குச் சமாதானம் சொல்லப்படவில்லை. எழு ஆசயங்களுக்கும் கோஷ்டாங்கங்களைப் பொருத்திவிட்டால் நமது கண்டனக்காரருடைய மதம் சற்று நிலைபெறும். இவர் மதப்படி ஹிருதயம் ஒன்றே ரக்தாசயத்திற்

கும், கபாசயத்திற்கும் பொதுவான கோஷ்டாங்கமெனச் சொல்ல நேரிடும். அந்த அர்த்தம் க்லிஷ்டமென்பது வியக்தம். ஸங்கிரஹத்தில் கோஷ்டாங்கங்களுக்கு "க்ரமம்" விவக்ஷிதமல்லவென்பது ஸங்கிரஹவசனத்தால் வியக்தமாகிறது. ஷை வசனம் கோஷ்டாங்கங்கள் முழுவதையும் சொல்லாமல் (ஹிருதய வசனம் கோஷ்டாங்கங்களைப் பூர்ணமாகச் சொல்லியுள்ளது) "ஆந்த்ரா நீனி" என்று எட்டு கோஷ்டாங்கங்களை சாப்தமாகச் சொல்லி மீதி நான்கு அவயவங்களை "ஆதி" சப்தத்தால் விவக்ஷித்திருப்பதால் இங்கு க்ரமம் விவக்ஷிதமல்ல. க்ரமம் விவக்ஷிதமாகில் 12 கோஷ்டாங்கங்களையும் சொல்லியிருக்க வேண்டும். சரக வசனத்திலும் க்ரமவிவக்ஷை காணப்படவில்லை. ஆகையால் இந்த வசனங்களைக் கொண்டு ஹிருதய வசனத்தை அந்யதாநயநம் செய்வது சரியல்ல. இந்து வியாக்யானம் "நாப்யாதீனி" என்று இருப்பதாலும் இது போன்ற வசனங்களாலும் நமது அர்த்தத்திற்கு வ்யாஹதி எவ்விதம் வரும் உதாரணமாகச் சில கோஷ்டாங்கங்களைச் சொல்லி ஆதிசப்தத்துடன் முடியும் வசனம் க்ரமத்தை விவக்ஷிக்குமென்று ஸஹிருதயர் ஒப்புக்கொள்ள முடியாது. டாக்டர் V. N. நாயர் அவர்கள் வியாசத்தின் சுருக்கமென்னவென்றால்—"அந்த நாள ஆரம்ப முதல் க்ரஹணீபர்யந்தமுள்ள பிரதேசம் அதாவது கழுத்திற்குக் கீழ் நாபிபர்யந்தமுள்ள பிரதேசம் முழுவதற்கும் ஆமாசயமெனப் பெயர், அதில் பூர்வ பாகம் அதாவது உரஸ்ஸில் அடைத்துள்ளவை ஹிருதய சப்தவாச்யம் stomach என்ற பாகம் புப்புஸம், அதற்குக்கீழ் அமைந்துள்ள குழாய் க்லோம சப்தவாச்யம்" என்று நிஷ்கர்ஷித்து அதற்கு ப்ரத்யக்ஷ வசனம் ஒன்றுகூட உதாஹரியாமல் யுக்திகளையும் ஔசித்யத்தையும் கொண்டு உபபாதனம் செய்துள்ளார். இந்நிலைமையில் நாம் உதாஹரித்துள்ள வசனங்களனைத்தும் நமது கண்டனககாரர் தனக்கு அனுகூலமென்கிறார். நாம் உதாஹரித்துள்ள வசனங்களில் எந்த வசனம் தமது மதத்தைக் குறிப்பிடுகிறதென்பதை ஒன்று இரண்டு இலக்கமிட்டுக்காட்டினால் நலமாக இருக்கும். நமது மதத்திற்கு அனுகூலமென்றான வசனங்களைப் பிற்கு விசதமாக நிரூபிக்க நினைத்த போதிலும் ...லம் அவற்றுள் சில்வற்றைக் காட்டுகிறோம். (1) "ஸப்தசா

தாரா'' என்ற அஷ்டாங்கஹிருதய வசனம். (2) சுசுருதசாரீரம் நான்காவது அத்யாயம் 25வது கத்யடல்ஹணடீகையில் புப்புஸ—ஹிருதபநாடிகாலக்ன: என்ற வசனம் (3) சரகம் விமானஸ்தானம் ஐந்தாவது அத்யாயம் பத்தாவது கதய சக்ரபாணி வியாக்யானம் 'க்லோம = ஹிருதயஸ்த பிபாஸாஸ்தானம் (4) மாதவநிதானம் ஹிக்காசுவாஸ நிதானம் எட்டாவது சுலோக வியாக்யானத்தில்'' ஜத்ருக்ரீவா மூலம், தத்கிரஹணேனைவ ஹிருதய க்லோம கண்ட கிரஹணம் இதி கயதாஸ: ''என்ற வசனம், (5) ஹிருதயம் சாரீரம் நான்காவது அத்யாயம் 12-வது சுலோக அருணா வியாக்யானத்தில்' மாம்ஸபேசிமயோ (சயோ) ரக்த பத்மாகார மதோமுகம்| தஸ்ய தக்ஷிணத: க்லோமவாமே புப்புஸ மாஸ்திகம்|'' என்ற வசனம், ஆக இந்த ஐந்து வசனங்களும் தனக்கு அனுகூலமென்று நமது கண்டனக்காரர் நினைக்கிறாரா? இந்த வசனங்கள் சர்வதா நமதுர்தத்திற்கு மிகவும் பொருத்தமானவைகள். இவைகளுக்கு வேறு அர்த்தமும் செய்யமுடியாது. நமது மதத்திற்கு இந்த பிரத்யக்ஷ வசனங்களை உதாஹரித்தோம். இவ்விதம் நமது மதத்திற்கு அனுகூலமாக ஒரு பிரத்யக்ஷ வசனத்தை நமது கண்டனக்காரர் காட்டிவிட்டால் நாம் உபசமம் அடைய சித்தம், ஆயுர்வேத சாரீரமும் ஆங்கில சாரீரமும் ஒத்திருப்பதைக் காட்டுவது ஓர் பாபச்செய்கை யாகாது. ஒற்றுமையைக் காட்டுவது வியாமோஹமென்றால் வேற்றுமையைக் காட்டுவதும் வ்யாமோஹ மாகாதா? ஆங்கிலர்கள் சொல்லும் ''கண், காதுகளை'' ஆயுர்வேதத்திலும் ''நேத்ரம், ச்ரோத்ரம்'' என்று சொன்னால் அது பாபமாகிவிடுமா? பிராசீன நவீன மதங்களில் பொருந்தக்கூடியதை நாம் எதற்காகத் தள்ளவேண்டுமென்பது தெரியவில்லை. இதற்காகத் திரும்பித்திரும்பி வசைபாடுவதும் நியாயமல்ல. டாக்டர் V. N. நாயர் அவர்கள் நிரூபித்த ''ஆமாசய'' பதத்தின் பொருள் சரியல்ல வென்பதற்காக ரக்தாசய ச்லேஷ்மாசயங்களைப் பல வசனங்களைக்கொண்டு காட்டினோம். அதாவது ஆமாசயத்திற்குமேல் ச்லேஷ்மாசயமும் அதற்குமேல் ரக்தாசயமும் ஆக இரண்டு ஆசயங்கள் இருப்பதாகப்பல வசனங்கள் இருப்பதால் ''கண்ட நாடியிலிருந்து நாபி பர்யந்தம் ஆமாசயம்'' என்ற மதம் வசன விருத்தமென்பது நமது நிரூபணத்தின் பொருள். இந்

நிருபணத்தில் "உரஸ்" என்ற பதத்தின் பொருள் விமர்சம் ஆகந்துகமாக சம்பவித்தது. இதில் விஸ்தாரமாக விசாரம் செய்வதில் முக்கிய பிரச்னை மறைந்துவிடுகின்றது. பிரஸக்தி வந்துவிட்டதால் இரண்டொரு வார்த்தை அதைப்பற்றிச் சொல்லுகிறோம். "ஆஜக்னே விஷம விலோசனஸ்ய வக்ஷ:" என்ற கிராதார்ஜுனீய சுலோகத்தில் "அர்ச்சுனன் காண்டீவத்தால் பரமசிவனுடைய வக்ஷஸ்ஸில் அடித்தான்" என்பனபோன்ற இடங்களில் அதாவது காவிய நாடகங்களில் ஒரு விதமான அர்த்தத்தில் பிரயோகம் காணப்படுகிறன. "உர: க்ஷதம்" "உர: கண்ட்சிர:" என்பனபோன்ற இடங்களில் வக்ஷத்திற்கு ஆச்ரயமும் கபத்திற்கு ஆச்ரயமும் ஆன உரஸ் சுவாசப்பைகளாகும். ஏனெனில் க்ஷயம், காஸம், சுவாஸம் போன்ற நோய்களுக்கு முக்கிய அதிஷ்டானம் சவாஸப்பைகள் என்பதை அங்கீகரிக்கவேண்டும், ஆகவே "உர கண்ட" என்ற இடத்திலுள்ள பதம் சுவாஸப்பைகளைக் குறிக்கின்றதென நாம் கூறுகிறோம். ஆகவே "உரஸ்" என்ற பதத்திற்குள்ள வேறு அர்த்தங்களை நாம் ஒருபோதும் மறுக்கவில்லை. ஒரு பதத்திற்குப் பல அர்த்தங்களில் பிரயோகம் இருப்பதை டாக்டர் V. N. நாயர் அவர்கள் அங்கீகரித்துள்ளார்கள். ஆகவே உரஸ் பதத்திற்கு வேறு அர்த்தங்களை ஔசித்யத்தால் அங்கீகரிப்பதுபோல "உர: கண்ட, உர: க்ஷதம்." என்ற இடங்களில் சுவாசப்பைகள் எனப்பொருள் கொள்வதுதான் உசிதம் என்பது நமது அபிப்பிராயம். இனி ஆதாராதேயங்களில் பேதம் நியதமானதால் ஓர் பிரச்னம் எழுப்பப்பட்டுள்ளது. இது மிகவும் சிறிய விஷயமென நினைத்து நாம் உபேக்ஷித்தோம். இந்தப் பிரச்னம் இங்கு குறிப்பிட்டு கூறப்பட்டிருப்பதால் அதை இனி கவனிப்போம். ரக்தாசயத்தில் ஹிருதயம் கோஷ்டாங்கமென்பது உபயவாதிகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்டு பிரத்யக்ஷ வசன ஸித்தமான விஷயம். ஹிருதய சப்தத்திற்கு ஸமஷ்டிபொருள் என்ற மதத்தில் ஆதாராதேயபாவம் எப்படிப்பொருந்துமோ அவ்விதமே வியஷ்டி வசனத்திலும் பொருந்தும். ரக்தாசயமும் ஸமஷ்டியே. கோஷ்டாங்கமான ஹிருதயமும் ஸமஷ்டியே. ரக்தாசயத்தில் ஹிருதயம் என்று அபின்னவஸ்துவில் பேதகல்பனை செய்து ஆதாராதேய

பாவத்தை நமது கண்டனக்காரர் ஸமர்த்தித்தாலும் அல்லது வேறு யுக்திகளால் ஸமர்த்தித்தாலும் அந்த உபாயமே நமக்கும் பொருந்தி விடுகின்றது. மேலும் மூத்ராசயத்தில் பஸ்தி கோஷ்டாங்கமென்ற இடத்திலும் இந்த ஆதாராதேயபாவம் ஸமர்த்திக்கப்படவேண்டும். பஸ்தியும் மூத்ராசயமும் பர்யாய பதங்களென்று ஹிருதயம் சாரீரப் நான்காவது அத்யாயம் "மூத்ராசயோ தனுர்வக்ர: பஸ்தி:" என்ற வசனத்தால் ஸித்தம். இங்கு ஆதாராதேய பாவத்தைப் பண்டிதர்கள் எவ்விதம் ஸமர்த்திக்கின்றனரோ அதே யுக்தியை நாமும் கைக்கொள்ளுவோம். இப்பேர்ப்பட்ட இடங்களில் "ராஹோ: சிர:" என்ற நியாயத்தைப் பெரியோர்கள் அனுசரிப்பது வழக்கம். நமது கண்டனக்காரருக்கும் நமக்கும் ஒரேவிதமான க்லேச மிருப்பதால் நம்மை மாத்திரம் பிரச்னம் செய்து நிறுத்தி விடுவது நியாயமல்ல. இங்கு ஒரு விஷயத்தைச் சொல்லுவது அவசியமாகின்றது. சாஸ்திரங்களில் சில சந்தர்ப்பங்களில் ரஸதாது, ரக்ததாது. இரண்டும் தனியாக இருந்தபோதிலும் விவக்ஷா விசேஷத்தால் ரஸதாதுவை ரக்தமென வியவஹரிப்பதுண்டு, இங்கு ரக்தாசயம் என்பது உண்மையில் ரஸாசயமாகும். (ரஸதாது ஆசயமென இதைக் கொள்ளலாம்) ப்லீஹ யக்ருத்துக்கள் ரக்தாசயமெனக் கூறப்பட்டுள்ளன. இது அப்ரக்ருத விசாரமாதலால் இதை நிறுத்துகிறோம். வக்ஷஸ்து ஆவரணப்பையுடன் கூடிய பிரதேசம் ரக்தாசயமென அதை ஆதாரமாகக்கொண்டுள்ள Heart என்பது கோஷ்டாங்களான ஹிருதயமெனவும் நாம் ஆதாராதேய பாவத்தை நிர்வகிக்கக் கூடும்.

மதுரை சுதேச வைத்திய ஸபா:—மேற்படி சபையின் நான்காவது வருஷோத்ஸவம் 24—1—43-ல் மதுரை காக்காத்தோப்புத் தெரு, ஸூரியநாராயண சாஸ்திரியார் பாடசாலையில் மதுரை ராவ்சாஹிப் தர்மபூஷணம், ஸ்ரீயுத N. நடேசய்யர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. காலை $8\frac{3}{4}$-மணிமுதல் 12-மணி வரையில் பகல் $3\frac{1}{2}$-மணி முதல் சாயங்காலம் 7-மணிவரையிலும் சபையில் பல உபந்யாசங்கள் நடைபெற்றன. பண்டிதர்களுக்கு "வைத்ய வாசஸ்பதி" என்ற பிருது சபையின் சார்பில் அளிக்கப்பட்டது. காரியதரிசி.

(1)	(2)	(1)	(2)